# ?????????????? ????????????? ???????????? ?????????????? ??????? ????? ?????? ??????????????? ????????????



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கான பாதுகாப்பு கடமையில் ஈடுபடுகின்ற 16 விசேட அதிரடிப்படையினருக்கு (STF) எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலின் வாக்கெண்ணும் தினமான கடந்த 6 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி வாக்கெண்ணும் நிலையத்தில் சுமந்திரனின் பாதுகாப்பு படையினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியமைக்கு எதிராகவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் மற்றும் முன்னாள் போராளி தனுபன் ஆகியோரா மேற்படி முறைபாட்டினை பதிவு செய்துள்ளனர்.

மேற்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தேர்தல் வாக்கெண்ணும் தினத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் சார்ப்பில் அதன் முகவர்களாக யாழ். மத்தியகல்லூரி வாக்கெண்ணும் நிலையத்தில் பணியில் ஈடுபட்டிருந்தோம்.

இதன்போது யாழ். தேர்தல் மாவட்டத்தில் மிகவும் குறைந்தளவிலான வாக்குகளை பெற்றுக்கொண்டவர்களின் விபரங்களை அறிவிக்காமல் வேண்டுமென்றே நீண்ட நேரத்திற்கு இழுத்தடிப்பு செய்யப்பட்டது. இதனால் குறித்த தாமதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அமைதியான முறையில் அங்கு ஒன்றுகூடி எதிர்ப்பினை வெளிப்படுத்தினோம்.

இந்நிலையில் அங்கு திடீரென சுமந்திரன் தனது பாதுகாப்பு படைகளுடன் வந்தார். இதன்போது அவரது பாதுகாப்பு படையினர் எங்களையும் கட்சித்தலைவர் மாவை சேனாதிராசாவின் மகனையும் இன்னும் பலரையும்

கண்மூடித்தனமாக தாக்கினர்.

அப்பகுதி யாழ் மாவட்ட செயலரின் கட்டுப்பாட்டில் காணப்பட்டிருந்ததாகவும் ஆனால் அவரது முடிவினை பெற்றுக்கொள்ளாது சுமந்திரனின் பாதுகாவலர்கள் இந்த ஜனநாகவிரோத செயலினை தன்னிச்சையாக மேற்கொண்டுள்ளதாகவும் மேற்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
**HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA**

ප්‍රාදේශීය මධ්‍යස්ථානය : අංක 01, 3 වන හරස් වීදිය යාපනය
பிராந்திய காரியாலயம்: இல. 01, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
Regional Office : No. 01, 3rd Cross Street, Jaffna
Tel No / Fax : 021 - 2222021


දිනය / திகதி / Date } 14/08/2020.

திரு. செல்வரட்ணம் சுதாபன்
[redacted]
.........................................

පැමිණිලි අංකය
முறைப்பாட்டு இல
Complaint No HRC/JA/..159../2020

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව වෙත ඔබ විසින්, ........../........../2020 දින යොමුකර ඇති පැමිණිල්ල, ඉහත කී අංකය යටතේ ලියාපදිංචි කර ඇති බවත් ඒ පිළිබඳව කොමිෂන් සභාවේ අවධානය යොමු වෙමින් පවතින බවත් මෙයින් දැනුම් දෙමු.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தங்களால் ..14../..08../2020 திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடானது மேற்குறிப்பிட்ட இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழுவின் கவனத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதையும் அறியத்தருகின்றோம்.

This is to inform you that, your complaint dated ......../......../2020 has been registered under the above number and is receiving the attention of the Commission.

සභාපතිවරයාගේ අත්සන යටතේ / தவிசாளரின் கையொப்பத்தின் கீழ் வழங்கப்படுகின்றது / issued under the hands of Chairperson

ප්‍රාදේශීය සම්බන්ධීකරණ නිලධාරී
பிராந்திய இணைப்பாளர்
Regional Coordinator


ප්‍රධාන කාර්යාලය 14, ආර්.ඒ.ද මෙල් මාවත, කොළඹ 04.
தலைமை காரியாலயம் 14, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை கொழும்பு 04.
Head Office 14, R.A.De Mel Mawatha, Colombo 04.
Tel: (+94)0112505580, 0112505581, 0112505582 Fax:(+94) 0112505591

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA**

ප්‍රාදේශීය කාර්යාලය / பிராந்திய நிலையம் / Regional Office — 01, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் / 01, 3rd Cross Street, Jaffna

தொலைபேசி / Telephone No. — 021 – 2222021

hrcjaffna@sltnet.lk


දිනය / திகதி / Date — 2020.08.14

சட்ட வைத்திய நிபுனர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக

முறைப்பாட்டிலக்கம்: **HRC /JA/159/2020**

திரு. செல்வரத்தினம் தனூபன் எனும் பெயருடைய நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளதாக இவ்ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டுள்ளார் இந் நபரினை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி இந்நபரது மருத்துவ அறிக்கையை விரைவாக எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளகின்றோம்.

1996 ஆம் ஆண்டு 21ம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 18 (C) யின் பிரகாரம் தேவைப்படுத்தப்படுகின்றது.

T.Kanagaraj
Regional Coordinator
Human Rights Commission of Sri Lanka
Jaffna

பிராந்திய இணைப்பாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம்

பிரதி:

திரு. செல்வரத்தினம் தனூபன் – யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ நிபுனரிடம் முன்னிலையாகுவதற்காக

# ????????????? ???????? ?????????: ???????? ????????????? ??????????? ??????????? ??????????? ??????? ?????!



இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் திருகோணமலையில் இடம்பெற்றது

குறித்த கூட்டம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இன்று (சனிக்கிழமை) நடைபெற்றது

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம், நிர்வாகச் செயலாளர் குணநாயகம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உருப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் ஸ்ரீதரன், வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், சட்டத்தரணி கே.வி.தவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின் பின்னராக செய்தியாளர்களுக்கு கருத்தும் தெரிவித்த இரா.சம்பந்தன், நறைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக விவாதிக்கப்பட்டதாகவும் அனைவருது கருத்துக்களும் கேட்டறியப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நியமன முடிவில் மாற்றம் இல்லை என்று குறிப்பிட்ட அவர் மத்திய குழு எதிர்வரும் 29ஆம் திகதி வவுனியாவில் கூடவுள்ளதாகவும் அதில் மற்றைய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

---

# ??????? ???????????????? ???????? ??????????? ?????????? ????-?????????????? ??????????!



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்தும், பேச்சாளர் பதவியிலிருந்தும் மணிவண்ணனை நீக்கும் முடிவை எடுத்துள்ளதாக முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, நேற்றிரவு எழுத்துமூலமாக மணிவண்ணனிற்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், இன்று அவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்றின் உறுப்பினர்களாக தெரிவாகியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இன்று (சனிக்கிழமை) முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலி செலுத்தினர். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

13ஆம் திகதி இரவு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மத்தியகுழு கூடி ஒரு சில முடிவுகளை எடுத்ததாகத் தெரிவித்துள்ள அவர், விசேடமாக மணிவண்ணன் தொடர்பாக பேசி சில முடிவுகள் எடுக்கப்பட்டன என்று குறிப்பிட்டார்.

மேலும், மணிவண்ணன் தமது அறிவிப்பை படித்துவிட்டு அவர் தனது நிலைப்பாட்டை அறிவித்த பின்னர், அடுத்தகட்டம் தொடர்பாக தெரிவிக்கவுள்ளதாக கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மணிவண்ணன் மீதான நடவடிக்கைக்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை.

# ??????? ??????????? ??????????



மில்லியன்களில் கடன்களுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் வெளியே விடப்பட்டுள்ளார்.

அனைத்து தேசிய அமைப்பாளர் பொறுப்பிலிருந்தும், ஊடகப் பேச்சாளர் பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக வி.மணிவண்ணனிற்கு கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக தெரியவருகின்றது

இன்று(15) காலை கட்சியின் செயலாளரிடமிருந்து உத்தியோகபூர்வமான அறிவித்தல் மின்னஞ்சல் வழியாக மணிவண்ணனிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரைகளிற்கென புலம்பெயர் உறவுகளது நிதி எதினையும் மணிவண்ணனிற்கு கிடைக்கவிடாது செயலாளர் கஜேந்திரன் தடுத்திருந்தார்.

இதனையடுத்து பலமில்லியன்களில் கடன்பட்டு தேர்தல் பரப்புரைகளை மணிவண்ணன் மேற்கொண்டதாக ஆதரவாளர்கள் தெரவிக்கின்றனர்.